## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 11.07.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

கடந்த சில நாட்களில் அமெரிக்காவிலும், கனடாவிலும் இஸ்லாத்தின் அழகிய போதனைகளின் தூதுச் செய்தியை அங்குள்ளவர்களுக்கு எடுத்துக் கூறுவதற்கான தவ்ஃபீக் எனக்கு கிடைத்தது. எவர்களுக்கு நான் கூறுவதை நேரடியாக கேட்பதற்கான வாய்ப்பு கிடைத்ததோ அல்லது எவருக்கு ஏதாவது ஒரு வகையில் ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம் கிடைத்ததோ அவர்களுக்கு இதனால் நல்ல விளைவு ஏற்பட்டிருக்கின்றது. இஸ்லாம் தொடர்பாக அவர்களது உள்ளங்களிலிருந்த சந்தேகங்கள் இதன் மூலம் அகன்று விட்டது. ஒட்டுமொத்தமாக பார்க்கும்போது அல்லாஹ்வின் அருளால் இந்தப் பயணம் இறைவனது அருள்களை சேகரிக்கக்கூடிய பயணமாக அமைந்தது. நம்மவர்களிடையேயும், மற்றவர்களிடமும் அல்லாஹ் இப்போதும் எதிர்காலத்திலும் இதன் சிறந்த நல்ல விளைவை உருவாக்குவானாக. நம்மவர்களிடத்திலும் மற்றவர்களிடத்திலும் இவ்வி-யங்களால் ஏற்பட்டுள்ள சிறந்த தாக்கத்தைப் பற்றி நான் கேட்டுத் தெரிந்ததன் மூலம் அல்லது நேரடியாக பார்த்ததன் மூலமும் இவை நமது ஜமாஅத்தின் அமைப்புரீதியான உயர்வான செயல்திட்டத்தின் விளைவாக மட்டுமே நடந்தன என்றோ அல்லது மற்றவர்களிடையே நான் எடுத்து வைத்த கருத்துக்களின் காரணமாகத்தான் மக்களின் கவனம் நம் பக்கம் திரும்பியது என்றோ இதன் மூலமாகத்தான் இஸ்லாம் தொடர்பாக அவர்களுக்கு எழுந்த சந்தேகங்கள் அகன்று விட்டன என்றோ என்னால் கூற முடியாது.

நிச்சயமாக திருக்குர்ஆனும், ஹதீஸ்களும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அறிவார்ந்த சொற்களும் உள்ளங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆனால், இதில் இறைவனது நாட்டமும் விருப்பமும் இல்லாமல் இருந்தால் எவர்கள் காழ்ப்புணர்ச்சியின் பகைமையிலும், எதிர்ப்பிலும் ஈடுபட்டு விடுகின்றார்களோ அவர்களை இறைவனின் இதே சொற்கள் நஷ்டத்தைத் தவிர வேறு எதிலும் அவர்களை முன்னேற வைக்காது என்று அல்லாஹ் கூறியுள்ளான். எனவே, உள்ளங்களை திறப்பதும் அவற்றில் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்துவதும் கூட இறைவனின் பணியாகும். அவன் விரும்பும்போது இதற்கேற்ற சூழ்நிலையையும் நிலைமைகளையும் உருவாக்குகின்றான். இந்த காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக இஸ்லாத்தின் தூதுச் செய்தி உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும் என்று இறைவன் விரும்பியுள்ளான். பிறகு இவர்களில் நல்ல இயல்புள்ள மக்கள் இந்த தூதுச் செய்தியை ஏற்றுக் கொள்வார்கள். பிறகு படிப்படியாக இதன் தாக்கத்தை ஒவ்வொருவரும் தங்களது உள்ளங்களில் உணர ஆரம்பிப்பார்கள். குறைந்தபட்சம் எவர்களுக்கு இஸ்லாத்தின் அழகிய போதனைகள் எட்டுகின்றதோ அவர்களிடத்தில் குறைந்தபட்ச நன்மைகள் இருந்தாலும் அவர்கள் இஸ்லாத்தை எதிர்ப்பதிலிருந்தும் விலகி விடுவார்கள். இஸ்லாத்தின் அழகிய முகத்தை மக்களுக்கு காட்டுவதற்காகவே இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அல்லாஹ் அனுப்பியுள்ளான். மேலும் இந்தக் காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களால்தான் இஸ்லாத்தின் உண்மையான முகத்தை மக்களுக்கு காட்ட முடியும். ஏனென்றால், இப்போது இஸ்லாத்தின் அழகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த உண்மைப் பேரன்பரின் மூலமாகவே உலகத்திற்கு வெளிப்பட வேண்டும் என்று அல்லாஹ் விதித்துள்ளான். விண்ணின் உதவிகள் நம்முடன் உள்ளன என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறைவன் தனது இல்ஹாம் மூலமாக அறிவித்துள்ளான். எனவே, வானத்தின் உதவிகள் நம்முடன் இருக்கும்போது அதன் நல்ல விளைவுகளும் வெளிப்படும். இஸ்லாத்தைப் பற்றி முற்றிலும் புதிய வி-யங்கள் இன்று எங்களுக்கு தெரிய வந்துள்ளது என்று மக்கள் நம்மிடம் கூறுகின்றார்கள் என்றால் வானத்திலிருந்து உதவிகளை வழங்குவதாக இறைவன் அளித்த வாக்குறுதியை அவன் நிறைவேற்றியதனால்தான் இது நடந்தது. அல்லாஹ்தான் உள்ளங்களையும் நெஞ்சங்களையும் திறந்து கொண்டிருக்கின்றான். இஸ்லாம் தொடர்பாக நாம் கூறும் கருத்துக்களை எவ்வித விமர்சனமும் செய்யாமல் இவர்கள் மக்களுக்கு எடுத்துக் கூறியிருப்பது

இறைவனின் குறிப்பான உதவியால்தான் நடந்துள்ளது. மேற்கத்திய மக்கள் சுதந்திரமாக தங்கள் கருத்துக்களை கூறுபவர்களாகவும் குறிப்பாக இஸ்லாம் தொடர்பாக நாம் கூறுபவற்றைத் திரித்துக் கூறக்கூடியவர்களாகவும் இருப்பதைத்தான் நாம் பார்த்துள்ளோம். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பெயரை கண்ணியத்துடன் இவர்கள் கூறுவதும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கலீஃபாக்களுடன் இவர்கள் கண்ணியத்துடன் நடந்து கொள்வதும் எல்லா விதமான காழ்ப்புணர்ச்சியை விட்டுவிட்டு இவர்களில் பலரும் ஜமாஅத்தைப் புகழ்ந்து கூறியிருப்பதும் இறை உதவியின் அடையாளங்களாக திகழ்கின்றன. இந்த இறை உதவியின் அடையாளங்களை இந்த சுற்றுப்பயணத்தின் போது நான் கண்டேன். நான் கண்ட இந்த காட்சிகளை கனடாவிலும், அமெரிக்காவிலுமுள்ள அஹ்மதிகளும் கண்டுள்ளார்கள். ஜமாஅத்தின் பல நிகழ்ச்சிகளிலும் ஏதாவதொரு வகையில் கலந்து கொண்ட ஒவ்வொரு அஹ்மதியும் அல்லது தனக்கு அறிமுகமான நெருங்கிய நண்பர்களை இந்த நிகழ்ச்சிகளுக்கு அழைத்து வந்த ஒவ்வொரு அஹ்மதியும் நாங்கள் எதிர்பார்த்ததை விட எங்களது அழைப்பின் பேரில் நமது வி-யங்களை கேட்பதற்காக மக்களது கவனம் நம் பக்கம் திரும்பியுள்ளது என்று கூறியுள்ளார்கள். பத்திரிகைகளும், ஏனைய மீடியாக்களும் இஸ்லாத்தின் உண்மையான போதனைகள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனைகள் ஆகியவற்றை Coverage செய்து அந்த செய்தியை மற்றவர்களுக்கும் எட்ட வைத்துள்ளார்கள். நான் கண்ணியத்துடன் உமது புகழை பரவச் செய்வேன் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இறைவன் கூறியிருந்தான். நான் உனது தூதுச் செய்தியை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன் என்று இறைவன் அவர்களிடம் வாக்களித்துள்ளான். இந்த இறை வாக்குறுதி உலகின் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு கண்டத்திலும் நிறைவேறுவதை நாம் பார்க்கின்றோம். இந்த வருடம் அஹ்மதிய்யா கிலாஃபத் தோன்றி நூறு ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வாதத்தையும், அவர்களைப் பற்றிய அறிமுகத்தையும் மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் அதற்கு சாதகமான வகையிலுள்ள தனது உதவியின் காற்றை உலகில் இப்போது வீசும்படி செய்துள்ளான். இது இறைவனது குறிப்பான அருளால் நிகழ்ந்துள்ளது. அல்லாஹ்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது தூதுச் செய்தியை எட்ட வைத்துக் கொண்டிருக்கின்றான். நாம் முயற்சிகள் செய்திருந்தாலும் இந்த அளவு விரிவாக ஜமாஅத்தைப் பற்றி அறிமுகம் செய்யவோ ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகை தொடர்பான அறிவிப்பை செய்யவோ முடிந்திருக்காது. நமது முயற்சிகளால் மட்டும் இது சாத்தியமான ஒன்றல்ல. குறிப்பாக இந்த நாடுகளில் இஸ்லாத்தை ஆட்சேபனைகளின் கண்கொணடு மக்கள் பார்க்கும்போது நமது செய்தி விரிவாக பரவியது இறைவனின் அருளேயாகும்.

இறைவனின் வாக்குறுதி அமெரிக்காவில் நிறைவேறுவதை நாங்கள் இவ்வாறு கண்டோம். எங்களைப் போன்றே சிந்திக்கின்ற ஒவ்வொரு உள்ளமும் இதை உணர்ந்திருக்கின்றது. பென்ஸிலோனியா என்ற ஒரு நகரத்தில்தான் நமது ஆண்டு மாநாடு நடந்தது. கிலாஃபத் ஜுப்ளியையொட்டி இந்த மாநாட்டிற்கு ஓரளவு விளம்பரம் கிடைத்திருந்தாலும் இவ்வகையில் நமது ஜமாஅத் மக்களுக்கு அறிமுகமாவதற்காக தனது உதவியின் காற்றை அல்லாஹ் வீசச் செய்தான். இந்த நகரத்திலுள்ள சட்டசபையானது திறந்த உள்ளத்துடன் சில சட்டமன்ற உறுப்பினர்கள் கூறியதற்கேற்ப ஜமாஅத் இந்த நகரத்தில் மாநாடு நடத்துவதை வரவேற்றதுடன் அஹ்மதிய்யா கிலாஃபத் தோன்றி நூறு ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி ஜமாஅத்திற்கு வாழ்த்துக் கூறி ஒரு சட்டசபை தீர்மானம் (Resolution) நிறைவேற்ற முடிவு செய்தது. ஆனால் இதே சட்டசபையைச் சார்ந்த ஒரு உறுப்பினர் மட்டும் இதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஆட்சேபனை செய்தார். மிக தீவிரமான கிறிஸ்தவராக அவர் இருந்தார். இங்கிலாந்தில் இருப்பவர்களைவிட அமெரிக்காவில் கிறிஸ்தவத்தைப் பரப்புவதில் கடினத்தையும், தீவிரமான போக்கையும் மேற்கொள்கின்ற பலரும் இருக்கின்றார்கள். எவ்வாறிருப்பினும் இவர் இந்த தீர்மானத்தை எதிர்த்தார். இங்கு இன்னொரு வி-யத்தையும் தெளிவாகக் கூற விரும்புகின்றேன். **இவ்வாறு சட்டசபைத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு நமது தரப்பிலிருந்தும் எவ்வித முயற்சியையும் நாம் செய்யவில்லை.** கிலாஃபத்தின் நூற்றாண்டையொட்டி காலத்தின் கலீஃபா இங்கு வருவதால் இப்படிப்பட்ட சட்டமன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் ஜமாஅத் வைக்கவில்லை. இந்த சட்டமன்ற உறுப்பினர்களில் ஒரு

சிலருக்கு இதன் பக்கம் கவனம் ஏற்பட்டதன் காரணமாக அவர்களாகவே தங்களது கருத்தை சட்டமன்றத்தில் எடுத்து வைத்தார்கள். ஆனால், ஒரே ஒரு உறுப்பினர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். அஹ்மதிகள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை இறைவனாக ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதால் இவர்களை வரவேற்பதற்குரிய தகுதி இவர்களுக்கு இல்லை என்று தனது எதிர்ப்பிற்கான ஆதாரத்தை இவர் எடுத்து அவ்வாறு அந்த சட்டமன்ற உறுப்பினரை கூற வைத்தும்கூட அல்லாஹ்வின் விதிக்கு ஏற்பவே நடந்துள்ளது. ஏனென்றால், எவ்வித எதிர்ப்புமின்றி இந்த தீர்மானம் அமைதியாக நிறைவேற்றப்பட்டிருந்தால் இதைப் பற்றி சட்டசபையில் உள்ளவர்களுக்கு மட்டுமே தெரிந்திருக்கும் அல்லது நம்மிடம் இந்த தீர்மானத்தின் நகல் தரப்பட்டிருக்கும். பத்திரிகைகளிலும் இது பற்றிய செய்தி வெளியிடப்பட்டிருக்கும். நாமும் நமது நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் இவர்களுக்கு நன்றி தெரிவித்திருப்போம். அது நமது கடமைதான். ஆனால் வி-யம் இத்துடன் முடிந்திருக்கும். ஆனால் இதற்கு எதிர்ப்பு நிலவியது இறைவனது விதியாகும். ஏனென்றால், இந்த சட்டசபை உறுப்பினரின் இந்தக் கேள்வியை பத்திரிகைகளும் ஏனைய மீடியாக்களும் பிரச்சனைக்குரிய ஒரு வி-யமாக எடுத்து அதை சர்ச்சை செய்தது. இன்றைய நாட்களில் இண்டர்நெட்டிலும் இதுபோன்ற எல்லா செய்திகளும் வெளிவருவதை நாம் பார்க்கின்றோம். பிறகு இது தொடர்பான விவாதமும் நடைபெறுகிறது. அல்லாஹ் இப்படிப்பட்ட மக்களிலிருந்தும் எண்ணற்ற நபர்களை இந்த சட்டமன்ற உறுப்பினருக்கு எதிராக நிற்க வைத்தான். ஒருபுறம் நாம் மதசார்பற்றவர்களாக செயல்படுவதாக வாதம் செய்கின்றோம். இன்னொரு பக்கமாக பார்க்கும்போது இதுபோன்ற வாதங்களையும் நாம் செய்கின்றோம் என்று இவர்களிடையே விவாதம் ஆரம்பமானது. யூதர்களும், நாங்களும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை இறைவன் என்று ஏற்றுக் கொள்ளவில்லை என்பதற்காக நாங்களும் அமெரிக்காவில் சுதந்திரமாக இருப்பதற்குரிய உரிமையைப் பறிக்க எதிர்காலத்தில் முயற்சிகள் செய்யப்படலாம் என்று கூற ஆரம்பித்தார்கள். ஆனால் இவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாக என்னவெல்லாம் கூறியுள்ளார்கள்? அரசியல் காரணங்களுக்காக இன்று இவர்கள் அமைதியாக இருந்தாலும் இவர்களது உள்ளம் கிறிஸ்தவர்களுக்கு எதிராகவே இருக்கின்றது. ஆனால், அஹ்மதிகளாகிய நாம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை கண்ணியத்திற்குரிய இறைத்தூதர் என்று நம்புகின்றோம்.

யூதர்கள் நமக்கு சாதகமாக அறிக்கைகளை வெளியிட்டிருப்பதால் மவ்லவிமார்கள் பாருங்கள், நாங்கள் முதலிலேயே கூறி வந்தது போல் காதியானிகளும் யூதர்களும் ஒருவரேதான் என்று ஒருவேளை கூறலாம். ஆனால், நமக்கு எதிர்ப்பு இருந்து வருவது அல்லாஹ்வின் ஒரு எளிய அடியாரை நாம் இறைவனாக ஏற்றுக் கொள்ளாததனால்தான் என்பதை இவர்கள் மறந்து விடுகின்றார்கள். எவ்வாறிருப்பினும் இது மவ்லவிமார்களின் பணியாகும். அதை அவர்கள் செய்து கொண்டேயிருக்கட்டும். நமக்கு எதிராக இந்த சட்டமன்ற உறுப்பினர் எழுப்பிய குரலுக்கு கிறிஸ்தவர்களும் மதத்துடன் தொடர்புடைய ஒவ்வொருவரும் எதிர்ப்பு குரல் எழுப்பியது நமக்கு சாதகமாக அமைந்து விட்டது. தொடர்ந்து இதுபற்றிய விவாதங்கள் நடைபெற்று வந்ததால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றியும் ஜமாஅத்தைப் பற்றியும் மக்களுக்கு நல்ல அறிமுகம் கிடைத்து விட்டது. இதன் காரணமாக பத்திரிகைகளில் மாநாட்டையொட்டியும் கிலாஃபத் ஜுப்ளி தொடர்பாகவும் சிறந்த முறையில் செய்திகள் வெளிவந்திருந்தன. சில நாட்களுக்குப் பிறகு சட்டசபையில் இது தொடர்பான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு விட்டது. ஆனால் இந்த தீர்மானம் அமைதியாக எவ்வித எதிர்ப்புமின்றி நிறைவேற்றப்பட்டு இருந்தால் இந்த எதிர்ப்பின் காரணமாக நமக்கு கிடைத்த அறிமுகமும் விளம்பரமும் நமக்கு ஒருபோதும் கிடைத்திருக்காது. ஆகவே, ஜமாஅத்தை அறிமுகப்படுத்துவதற்கான அல்லாஹ்வின் வழிமுறை இப்படி அமைந்தது. எதிரிகளின் முயற்சிகளோ நம்மைத் தாழ்த்திக் காட்டுவதற்காக செய்யப்படுகிறது. ஆனால் அந்த எதிர்ப்பே நாம் அறிமுகமாவதற்கும் நமது விளம்பரத்திற்கும் காரணமாக அமைந்து விடுகிறது. இன்றைய நாட்களில் பாகிஸ்தானிலும், இந்தோனேஷியாவிலும், பங்களாதேஷிலும், இந்தியாவில் முஸ்லிம்கள் அதிகமாக உள்ள இடங்களிலும் குறிப்பாக ஹைதராபாத்திலும் ஜமாஅத்திற்கு வலுவான எதிர்ப்பு இருந்து வருகிறது. இதனால் இந்த நாடுகளிலும் முழு உலகிலும் ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம் மேலும் அதிகமாக கிடைத்து வருகின்றது. இந்தியாவில் சில இந்துக்களுக்கும், அரசாங்கத் துறையில் உள்ளவர்களுக்கும் ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம் இல்லாமல் இருந்தது. அங்கு ஏற்பட்ட எதிர்ப்பால்

இவர்களுக்கு ஜமாஅத் அறிமுகமாகி விட்டது. எனவே, இது அல்லாஹ்வின் விதியாகும். ஜமாஅத்தை எதிர்க்கின்றவர் எந்த ஆயுதத்தை பயன்படுத்தினாலும் அல்லாஹ் அதிலிருந்தே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தூதுச் செய்தி மேலும் உலகில் பரவச் செய்து அவர்களின் கண்ணியத்தை உயர்த்துவதற்கான ஏற்பாட்டை செய்கின்றான். ஜமாஅத்திலுள்ள நபர்களுக்கு தங்களது கண்ணியத்தையும், செல்வங்களையும், சில நேரங்களில் உயிர்களையும் தியாகம் செய்ய வேண்டியது வருகிறது. ஆனால் இந்த தியாகங்கள் ஒருபோதும் வீணாகாது. இவ்வாறு தியாகங்கள் செய்கின்றவர்கள் அல்லது இவர்களது குடும்பம்தான் பின்னர் இறைவனின் அருட்கொடைகளுக்கு வாரிசாகி விடுகின்றார்கள். ஜமாஅத் அளவிலும் அல்லாஹ் இதனால் தனது அருள்களை வழங்குகின்றான்.

அமெரிக்காவில் நடைபெற்ற நமது மாநாடு தொடர்பாகவும் அங்குள்ள பத்திரிகைகளும் மீடியாக்களும் செய்திகள் வெளியிட்டிருந்தன. என்னிடம் Interview எடுப்பதற்காக இவர்களின் பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள் அவர்களும் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். இவர்களில் ஒரு பிரதிநிதி தனியாக என்னிடம் Interview எடுத்தார். என்னிடம் பல கேள்விகளை கேட்டார். பிறகு நான் கூறியவற்றில் எதையும் விடாமல் முழுமையாக அதனை வெளியிட்டார்கள். நான் கூறிய கருத்துக்கள் அவர்களது மதத்தின் கொள்கைக்கு மாற்றமானதாகவும் இருந்துள்ளது. Pennsylvania –ன் ஒரு பத்திரிகையான Lancaster Intelligencer Journal –ன் பிரதிநிதி ஒருவர் என்னிடம் Interview எடுத்த பிறகு அதை வெளியிட்டுள்ளார். எனது புகைப்படத்துடன் இஸ்லாத்தின் கலீஃபா வாரத்தின் இறுதிநாளில் உலக மக்கள் அனைவருக்கும் ஒரு தூதுச் செய்தியை வழங்கியுள்ளார்கள்.

இவ்வாறு அமெரிக்காவில் ஒவ்வொரு பத்திரிகையிலும் இஸ்லாத்தின் கலீஃபா என்று குறிப்பிட்டிருப்பது ஒவ்வொரு முஸ்லிம் நாடுகளிலுமுள்ள முஸ்லிம்களுக்கும் குறிப்பாக மவ்லவிமார்களுக்கும் பெரும் துன்பத்தை தந்திருக்கும்.

**பத்திரிகையின் பிரதிநிதி தொடர்ந்து இவ்வாறு எழுதுகின்றார்:**

மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் தனது தூதுச் செய்தியில், நீங்கள் இறைவனின் படைப்பினங்களுடன் அன்பு காட்டினால்தான் உங்களைப் படைத்த இறைவனை நீங்கள் அறிந்து கொள்ள முடியும் என்று கூறினார். இந்த தூதுச் செய்தி அமெரிக்காவிலுள்ளவர் களுக்கு மட்டும் உரிய ஒன்றல்ல. மாறாக, இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முழு உலகத்திற்காகவும் கொண்டு வந்துள்ள தூதுச் செய்தியாகும் என்று அவர் கூறினார்.

**தொடர்ந்து அவர் எழுதுகின்றார்:**

ஒவ்வொருவரும் இந்த தூதுச் செய்தியை நினைவில் வைத்து செயல்பட்டால் உலகத்தில் பகைமை எஞ்சியிருக்காது. மக்களது உள்ளங்கள் காழ்ப்புணர்ச்சியை விட்டும் தூய்மையடைந்து விடும். உலகில் அமைதியை ஏற்படுத்துவதற்கான ஒரே வழி இதுதான். உலகத்திற்கு அணு குண்டுகள் தேவையில்லை. அல்லாஹ் வழங்கியுள்ள ஒவ்வொரு பொருளையும் மக்களது நலனுக்காக பயன்படுத்த வேண்டும்.

**தொடர்ந்து இவர் எழுதுகின்றார்:**

எல்லா முஸ்லிம் பிரிவுகளும் ஒன்றுபட வேண்டும் என்பது மட்டும் எனது தூதுச் செய்தி அல்ல. மாறாக, எல்லா மதங்களைச் சேர்ந்தவர்களும் ஒன்றுபட்டு ஒருவர் மற்றவருடன் கைகோர்த்து நிற்க வேண்டும் என்பதே எனது தூதுச் செய்தியாகும். மேலும் எந்த நபருக்காக அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்காக அவர்கள் காத்துக் கொண்டிருக்கின்றார்களோ அந்த மஸீஹ் வந்து விட்டார் என்று அஹ்மது (ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் – மொழிபெயர்ப்பாளர்) தனது தூதுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில், மக்களின் ஒரு பெரும் பகுதி மார்க்கத்தில் ஆர்வம் உடையவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் இரண்டாவது வருகைக்காக காத்திருக்கின்றார்கள். எந்த மஸீஹிற்காக நீங்கள் காத்துக் கொண்டிருக்கின்றீர்களோ அந்த மஸீஹ் வந்து

விட்டார் என்ற பத்திரிகைச் செய்தி சிறிதளவாவது மக்களின் கவனத்தை ஜமாஅத்தின் பக்கம் திரும்பச் செய்யும். இந்த எல்லா ஏற்பாடுகளையும் இறைவனே செய்துள்ளான்.

எனது சுற்றுப் பயணத்தைப் பற்றியும் மாநாடு பற்றியும் அமெரிக்காவின் 22 பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளன. வானொலி நிலையத்திலும் மூன்று தொலைக்காட்சி நிலையத்திலும் செய்திகள் ஒளிபரப்பாகியுள்ளது. Interview ஐ பற்றிய செய்திகள் 15 website –களில் வெளிவந்துள்ளது. ஜமாஅத் தனது வசதிக்கேற்ப இவ்வளவு விரிவாக இப்படிப்பட்ட ஏற்பாட்டை ஒருபோதும் செய்திருக்க முடியாது. அல்லாஹ்வே இந்த ஏற்பாடுகளை செய்துள்ளான்.

அமெரிக்காவில் ஒரு Hotel –ல் வரவேற்பு நிகழ்ச்சி ஒன்று நடந்தது. பல்வேறு துறைகளைச் சார்ந்த பல்வேறு அறிஞர்கள் பலர் அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அங்கு நான் திருக்குர்ஆன், நபிமொழி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி ஆகியவற்றின் அடிப்படையிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனைகளின் அடிப்படையிலும் ஜிஹாதின் உண்மை நிலை பற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறினேன். மேலும் மர்யமின் மகன் ஈஸா ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் அவர்களின் வடிவில் தோன்றி விட்டார் என்றும் நான் கூறினேன். அமெரிக்கா ஒரு பெரும் சக்தியாக இருக்கின்றது. இந்த வகையில் நீதியை நிலைநாட்டி அதன் மூலம் உலகில் அமைதியை ஏற்படுத்த அது முயற்சி செய்ய வேண்டும் என்றும் நான் கூறினேன். நீதியுடன் செயல்பட்டால்தான் அது தனது கடமையை நிறைவேற்றியதாக கருதப்படும் என்று நான் கூறினேன். அங்கிருந்த அனைவரின் மீதும் இதன் சிறந்த தாக்கம் ஏற்பட்டது. இன்று எங்களுக்கு பல புதிய வி-யங்கள் தெரிய வந்துள்ளது என பலரும் என்னிடம் கூறினார்கள். ஆனால், உண்மையில் இது ஒரு புதிய வி-யமல்ல. திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியின் உண்மையான தோற்றத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்குக் காட்டித் தந்துள்ளார்கள். இதற்கு தவறான நிறத்தை முல்லாக்கள் வழங்கி, இஸ்லாத்திற்கு அவப்பெயரை உண்டாக்குவதற்கு காரணமாக இருப்பதை இன்று நாம் பார்க்கின்றோம்.

அமெரிக்க ஜமாஅத்தின் ஆண்டு மாநாடும் அல்லாஹ்வின் அருளால் மிகவும் வெற்றிகரமாக நடந்திருக்கின்றது. ஜமாஅத்தின் மரபுகளுக்கு ஏற்ப எல்லாத் துறைகளும் அங்கு செயல்பட்டன. இம்முறை இதற்காக அவர்கள் தேர்ந்தெடுத்த இடம் ஒரு மிகப்பெரும் பகுதியாகும். அங்கு பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளது. பெரிய பெரிய ஹால்கள் இதில் இருக்கின்றது. இவ்வகையில் மாநாட்டு திடல், உணவு சமைப்பதற்கான இடம், டைனிங் ஹால், பல்வேறு துறைகளுக்கான இடம், கண்காட்சி நடத்துவதற்கான இடம் ஆகிய இவை எல்லாமே ஒரே இடத்தில் அமைந்திருந்தது நமக்கு மிகவும் வசதியாக இருந்தது. இவர்களது கண்காட்சியும் குறிப்பாக கிலாஃபத் என்ற தலைப்பில் அமைக்கப்பட்டிருந்தது. அந்த கண்காட்சியில் ஒரு தனித்தன்மை இருந்தது. அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதாவது ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களிலிருந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கிலாஃபத்தின் எல்லா காலகட்டங்களின் வரலாறு வரை எல்லாவற்றையும் அவர்கள் விளக்கமாக காட்டியிருந்தார்கள்.

அமெரிக்காவில் இது எனது முதல் சுற்றுப் பயணமாகும். ஏறக்குறைய 10 வருடங்களுக்குப் பிறகு காலத்தின் கலீஃபா அங்கு சுற்றுப் பயணத்தில் சென்றுள்ளார். ஒரு புதிய தலைமுறை தற்போது இளைஞர்களின் வடிவில் ஜமாஅத்தின் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். பத்து வருடங்களுக்கு முன்னர் சிறுவர்களாக இருந்தவர்கள் இப்போது இளைஞர்களாகிக் கொண்டிருக்கின்றார்கள். பிறகு மேற்கத்திய சூழ்நிலையின் தாக்கம் ஓரளவு இருந்தாலும் கூட இளைஞர்களாக இருக்கக்கூடிய ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஜமாஅத்துடன் கலப்பற்ற மனத்தூய்மையுடன் கூடிய ஒரு தொடர்பு இருக்கின்றது. கிலாஃபத்துடன் ஆழமான தொடர்பு இருக்கின்றது. மாநாட்டு பணிகளிலும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட Duty -களைச் செய்வதிலும் உடலுழைப்புடன் எல்லாரும் பணியாற்றினார்கள். அல்லாஹ் எத்தகைய அன்பான மக்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழங்கியிருக்கின்றான்!

அமெரிக்காவில் ஜமாஅத்திலுள்ள ஒரு பெரும் எண்ணிக்கை ஆப்பிரிக்க- அமெரிக்க (Afro American) அஹ்மதிகளுடையதாக இருக்கின்றது. இவ்வாறே சில வெள்ளையர்களான அமெரிக்கர்களும்

இருக்கின்றார்கள். அல்லாஹ்வின் அருளால் தங்கள் Duty-யில் ஒவ்வொருவரும் ஒருவர் மற்றவரை முந்தும் வகையில் பங்கெடுப்பவர்களாக இருந்தார்கள். கிலாஃபத்திற்காக அன்பு செலுத்துவது அங்குள்ள அஹ்மதிகளின் உள்ளத்தில் நிறைந்திருக்கின்றது. அவர்களது கண்களில் கிலாஃபத்திற்கான கண்ணியமும், அன்பும் தென்பட்டது. அல்லாஹ் இவர்கள் அனைவரையும் இவர்களது மனத்தூய்மையிலும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வதிலும் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் வழங்குவானாக.

அமெரிக்காவிற்கு அடுத்த படியாக அல்லாஹ்வின் அருளால் கனடாவில் ஆண்டு மாநாடு நடந்தது. கனடாவில் ஜமாஅத்தின் எண்ணிக்கைக்கு ஏற்ப எப்போதும் மாநாடு சிறப்பாக இருக்கும். இதற்கு முன்னரும் இரண்டு முறை மாநாட்டில் கலந்து கொள்ள நான் அங்கு சென்றுள்ளேன். அப்போது அமெரிக்காவிலுள்ளவர்களும் அங்கு வருவார்கள். நான் இந்த முறை அமெரிக்கா சென்று விட்டு கனடா சென்றதால் அமெரிக்காவிலிருந்தும் கனடா ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக எப்போதும் வருகின்ற 3000 அல்லது 4000 நபர்கள் இந்த முறை கனடா வரவில்லை. பிறகு கல்கேரியில் பள்ளிவாசலைத் திறந்து வைப்பதற்காக நான் செல்ல வேண்டியது இருந்தது. எனவே, அங்கிருந்தும் அதற்கு அருகாமையிலுள்ள பகுதிகளிலிருந்தும் மிகக் குறைவாகவே மக்கள் மாநாட்டிற்கு வந்திருந்தார்கள். ஏறக்குறைய 3 அல்லது 4 ஆயிரம் பேர் இந்தப் பகுதிகளில் இருக்கின்றார்கள். கனடா மிக விரிவான நாடாகும். ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு செல்லும் தூரம் அதிகமானதாக இருக்கும். ஒரே நாட்டில் இருந்தாலும் நேரத்தில் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு 2 மணி நேர வித்தியாசமும் இருக்கின்றது. டொராண்டாவிலிருந்து கல்கேரிக்கு விமானத்தில் 4 மணி நேரம் பயணம் செய்ய வேண்டியதுள்ளது. இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தும்கூட கனடாவில் ஆண்டு மாநாட்டில் ஏறக்குறைய 15000 பேர் கலந்து கொண்டார்கள். கனடாவில் பெரும்பாலான அஹ்மதிகள் பாகிஸ்தானியர்கள் ஆவார்கள். பாகிஸ்தானில் Duty கொடுத்து அவர்களுக்கு நல்ல அனுபவம் இருக்கின்றது. அங்கும் அமெரிக்காவைப் போன்றே ஒரே இடத்தில் எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. உணவு சமைப்பதற்கான ஏற்பாடுகள் மட்டும் வேறு இடத்தில் செய்யப்பட்டு உணவு சமைத்த பிறகு மாநாட்டு திடலுக்கு அது கொண்டு வரப்பட்டது. இவ்வாறு உறுதியான ஏற்பாடுகளின் விளைவாக நல்ல வசதிகள் அங்கு இருக்கின்றது. ஆனால், இங்கு இங்கிலாந்திலுள்ளவர்கள் இதைக் கேட்டு விட்டு கவலையடைய வேண்டாம். மிகவும் உழைத்து தற்காலிக ஏற்பாடுகளை செய்வதால் U.K -வின் ஆண்டு மாநாட்டிற்குள்ள பொலிவில் ஒரு தனிப்பட்ட இன்பம் இருக்கின்றது. விருந்தினர்களும் விருந்தோம்பல் செய்பவர்களும் மழையிலும் சகதியிலும் செல்ல வேண்டியது வந்தாலும் அதிலும் ஒரு இன்பம் இருக்கின்றது. இங்கும் ஒரு நேரம் வரும் போது இங்குள்ள ஏற்பாடுகளும் மிகவும் உறுதியானதாக ஆகி விடும். கனடாவின் ஆண்டு மாநாடு மிகவும் வெற்றிகரமாக நடந்தது. இந்த மாநாட்டைப் பற்றிய செய்திகளை அங்குள்ள 5 பெரும் பத்திரிகைகள் மிகவும் விரிவான முறையில் Coverage செய்து வெளியிட்டிருந்தது. இந்த பத்திரிகைகளைப் படிப்பவர்களின் எண்ணிக்கை 2½ மில்லியன் ஆகும். இதைத் தவிர சிறிய பத்திரிகைகளும், வானொலி நிலையமும் செய்திகளை Coverage செய்திருந்தது. 6 தொலைக்காட்சி நிலையங்களும் இச்செய்திகளை Coverage செய்திருந்தார்கள். Interview-விலும் செய்திகள் வந்து கொண்டிருந்தன.

கனடாவில் கிலாஃபத் ஜுப்ளியையொட்டி அதிகப்படியான ஒரு நிகழ்ச்சியாக கனடா ஜமாஅத் ஒரு வரவேற்பு நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை செய்திருந்தது. அதில் கிறிஸ்தவர்களின் பிரதிநிதிகளும், அரசாங்க உறுப்பினர்களும், படித்த அறிஞர்களும், பல்வேறு துறையைச் சேர்ந்த மக்களும் கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்ச்சியிலும் நான் திருக்குர்ஆன், நபிமொழிகள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சொற்களின் ஒளியில் அமைதியை விரும்பக்கூடிய இஸ்லாத்தின் அழகிய போதனைகளை எடுத்துக் கூறி இஸ்லாம் தொடர்பாக அவர்களது உள்ளங்களிலுள்ள சந்தேகங்களை அகற்றுவதற்கு முயற்சி செய்தேன். அவர்களிடம் ஏக இறைவனை அறிந்து கொள்ளுங்கள். அதில்தான் உலகம் எஞ்சியிருப்பது அடங்கியுள்ளது. இஸ்லாம் எடுத்துக் கூறும் இறைவன்தான் உண்மையான இறைவன் என்று கூறினேன். இந்த நிகழ்ச்சியில் ஏறக்குறைய 550 அஹ்மதிகளல்லாத விருந்தினர்கள் கலந்து கொண்டார்கள். ஒரு மாநிலத்தின் முதலமைச்சரும் இதில் கலந்து கெண்டார்கள். சட்டசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். பிரதமரின் உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். பிரதமரின் பிரதிநிதியும் அதில் கலந்து கொண்டார். அல்லாஹ்வின்

அருளால் மிகச் சிறந்த தாக்கம் ஏற்பட்டிருக்கின்றது. பல கிறிஸ்தவ பாதிரிமார்களும், பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்களும், மற்றவர்களும் என்னைச் சந்தித்து எங்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி பல புதிய வி-யங்கள் தெரிய வந்துள்ளது என்று கூறினார்கள்.

இவ்வாறே வெள்ளிக்கிழமையன்று கல்கேரியிலுள்ள பள்ளிவாசலின் துவக்க நிகழ்ச்சி நடந்த போது அதற்கடுத்த நாள் சனிக்கிழமை அஹ்மதியல்லாத மற்றவர்களுக்கு ஒரு விருந்து நிகழ்ச்சிக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சியிலும் பள்ளிவாசலை மையமாக வைத்து இறைவணக்கம் தொடர்பாக இஸ்லாத்தின் தூதுச் செய்தியை மக்களுக்கு எட்ட வைப்பதற்கான தவ்ஃபீக் கிடைத்தது. மக்கள் அனைவரும் மிகுந்த கவனத்துடன் நாம் கூறுகின்ற எல்லா வி-யங்களையும் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். கடந்த குத்பாவில் நான் கூறியது போன்றே இது ஒரு அழகிய பள்ளிவாசலாகும். நான் இந்த பள்ளிவாசலுக்கான அடிக்கல்லை வைத்த அந்த நாளில் கடுமையாக மழை பெய்தது. அங்குள்ள தெருக்களும் மோசமாக இருந்தன. நாம் இங்கு பள்ளிவாசலை கட்டுகின்றோம். ஆனால் வெளிப்படையாக பார்க்கும் போது இது பள்ளிவாசல் கட்டுவதற்குத் தகுதியான இடமாக தெரியவில்லையே என்று நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். ஆனால், அல்லாஹ் இதற்கான ஏற்பாட்டை எவ்வாறு செய்தான் என்றால் இந்த மூன்று ஆண்டுகளில் இந்த பள்ளிவாசலுக்கு அருகில் Highway (நெடுஞ்சாலை) உருவாகி விட்டது. தெருக்களும் அழகாக ஆக்கப்பட்டுள்ளது. பல புதிய Development அங்கு நடந்துள்ளது. பள்ளிவாசலுக்கு முன்னால் ஒரு அழகிய பூங்கா நிறுவப்பட்டிருக்கின்றது. அந்த பூங்காவின் ஒரு பெரும் பகுதியை பராமரிக்கும் பொறுப்பை ஜமாஅத்திடம் அங்குள்ள கவுன்சில் ஒப்படைத்துள்ளது. கடந்த வருடம் அங்கு இரயில் நிலையமும் உருவாகி விட்டது. அந்த இரயில் நிலையம் பள்ளிவாசலிலிருந்து 10 நிமிடங்கள் நடந்து செல்லும் தொலைவில்தான் உள்ளது. நகரத்தின் ஒவ்வொரு இடத்திலிருந்தும் இரயில்கள் அங்கு வருகின்றன. இதனால் பள்ளிவாசலை சென்றடைவதும் எளிதாகி விட்டது. இவ்வாறு பள்ளிவாசலுடன் அல்லாஹ் நமது வசதிக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து தந்து விட்டான். இதுவும் அல்லாஹ்வின் ஒரு குறிப்பான அருளாகும்.

இந்த பள்ளிவாசல் இந்த பகுதியிலுள்ள அனைவரது கவனத்தை மட்டுமல்லாமல் இந்த நாட்டிலுள்ள அனைவரது கவனத்தையும் தனது பக்கம் ஈர்த்துள்ளது. இன்னும் சொல்லப்போனால் உலகின் கவனத்தை தன்பால் ஈர்த்துள்ளது. சனிக்கிழமையன்று நடந்த வரவேற்பு நிகழ்ச்சியில் தனது பல்வேறு அலுவல்களுக்கு மத்தியில் நாட்டின் பிரதமர் வந்து கலந்து கொண்டார். பிரதமர் நமது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு விட்டு அங்கிருந்து நேரடியாக அவர் செல்ல வேண்டிய வெளிநாட்டிற்குச் சென்றார். பள்ளிவாசலைப் பார்த்து விட்டு நமது நிகழ்ச்சியில் சொற்பொழிவும் நிகழ்த்தினார். ஜமாஅத் தொடர்பாக தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினார். அல்லாஹ் அவருக்கும் இதற்கான நற்கூலியை வழங்குவானாக. அல்லாஹ்வின் அருளால் இந்த நிகழ்ச்சியும் ஜமாஅத்தை அறிமுகப்படுத்துவதற்குரிய ஒரு வழியாக இருந்தது. இறைவனை வணங்கும் இடங்களுடன் தொடர்புள்ள இஸ்லாமிய போதனைகள் பற்றி எனது சொற்பொழிவு இருந்தது. அதைக் கேட்ட கிறிஸ்தவ பாதிரிமார்கள் மிகவும் வியப்புடன் தங்களது கருத்துக்களை பரிமாறிக் கொண்டார்கள். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஒரு கிறிஸ்தவர் எனது சொற்பொழிவைக் கேட்டு விட்டு அழுததாகவும் இவைதான் உண்மையான போதனைகள் என்று கூறியதாகவும் ஒரு அஹ்மதி என்னிடம் கூறினார். அவர் இஸ்லாமிய போதனைகள்தான் மனிதனின் இயல்புக்கு ஏற்ற போதனைகளாக இருக்கின்றது என்றும் கூறியுள்ளார். இஸ்லாத்தின் போதனைகள் ஒவ்வொரு வி-யத்திலும் எல்லா நன்மைகளையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. நல்ல இயல்புள்ள மனிதனுக்கு அதை ஏற்றுக் கொள்வதை தவிர வேறு வழி இருக்க முடியாது. ஆப்கானிஸ்தானைச் சார்ந்த ஒரு நண்பர் ஒரு நீண்ட காலமாக ஜமாஅத்தைப் பற்றி அறிந்து வந்தார். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவர் என்னை சந்தித்தார். அழுதழுது அவரது நிலை பார்ப்பதற்கு கஷ்டமாக இருந்தது. எந்த அஹ்மதி சகோதரர் மூலமாக அவர் என்னை சந்திக்க வந்தாரோ அந்த அஹ்மதி என்னை இனி தடை செய்யாதீர்கள். நான் இன்றே பைஅத் செய்கின்றேன் என்று அவர் கூறியதாக என்னிடம் தெரிவித்தார். இவ்வாறு இன்னும் பல பைஅத்துகளும் நடந்தன.

அல்லாஹ்வின் அருளல் ஒவ்வொரு நாட்டில் மேற்கொள்ளப்படும் சுற்றுப் பயணமும் அஹ்மதிய்யத் மற்றும் உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கான ஒரு வழியாக ஆகி விட்டது. நான்

உனது புகழை கண்ணியத்துடன் பரவச் செய்வேன் என இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அளித்த வாக்குறுதியின் விளைவாக இவை நடக்கின்றன. இது இறைவனின் விதியாகும். இதை எவரும் மாற்ற முடியாது.

கல்கேரியிலுள்ள பள்ளிவாசல் தொடர்பான Coverage-ஐ 9 தொலைக்காட்சி நிலையங்கள் ஒளிபரப்பியுள்ளன. இந்த காட்சிகளை பார்ப்பவர்களின் எண்ணிக்கை 3.1 மில்லியன் ஆகும். 30 இலட்சம் பேர்களுக்கு நமது தூதுச் செய்தி எட்டியுள்ளது. 9 வானொலி நிலையங்கள் பள்ளிவாசலின் துவக்க நிகழ்ச்சியின Coverage -ஐ ஒலிபரப்பியுள்ளது. இதனால் 23 இலட்சம் மக்களுக்கு தூதுச் செய்தி எட்டியுள்ளது. பிரிண்ட் மீடியா கனடாவிலுள்ள முக்கிய பத்திரிகைகளில் ஜமாஅத்தின் செய்திகளை வெளியிட்டிருந்தது. இந்த பத்திரிகைகளைப் படிப்பவர்களின் எண்ணிக்கை 40 இலட்சமாகும். இந்த நாட்டிலுள்ள பத்திரிகைகளை தவிர்த்து பல நாடுகளிலுள்ள பத்திரிகைகளும் செய்திகளை வெளியிட்டுள்ளன. ஆஸ்திரேலியா, ஜெர்மனி, நியூசிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், இத்தாலி, இங்கிலாந்து, அமெரிக்கா, பெல்ஜியம், கென்யா ஆகிய நாடுகளிலுள்ள பத்திரிகைகளிலும் இந்த பள்ளிவாசல் பற்றிய செய்திகள் வந்துள்ளன. முஸ்லிம் நாடுகளிலுள்ள 41 பத்திரிகைகள் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது. ஈரான், துருக்கி, சவூதி அரேபியா, பாலஸ்தீனம், லெபனான் ஆகிய நாடுகளிலுள்ள பத்திரிகைகளும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது அறிமுகத்துடன் இஸ்லாத்திலுள்ள இந்த பிரிவினர் முஸ்லிம்களை உருவாக்கி வருகின்றார்கள் என்று செய்தி வெளியிட்டுள்ளது. உலகம் முழுவதும் இண்டர்நெட் மூலம் 130 website-கள் இதன் Coverage ஐ செய்துள்ளது. இந்த Coverage-ல் பல்வேறு விருந்தினர்களின் கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன. அவற்றில் ஒன்றிரண்டை நான் கூறி விடுகின்றேன். கல்கேரியின் மேயர் ஒரு மிகச் சிறந்த மனிதராவார். ஜமாஅத்துடன் மிக ஆழமான அன்பின் தொடர்பு இவருக்கு இருக்கின்றது. இவர்தான் பிரதமரை நமது இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வைப்பதற்குக் காரணமாக இருந்தவராவார். பிரதமருடன் இவருக்கு நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. இவர் ஜமாஅத்தை புகழ்ந்தவாறு கல்கேரியிலுள்ள பள்ளிவாசல் பற்றி இந்த பள்ளிவாசல் கல்கேரியின் அடிவானத்தில் உதயமாகின்ற ஒரு அதிகப்படியான பிரகாசமான ஒளியாகும் என்று கூறியுள்ளார்.

அஹ்மதிய்யா ஜமாஅத் இஸ்லாத்தின் உண்மையான அமைதியை விரும்பும் முகத்தை நமக்கு காட்டுகிறது. இந்த பள்ளிவாசல் அமைதி மற்றும் சமுதாய ஒற்றுமையின் அடையாளமாகத் திகழ்கிறது என்று கனடா நாட்டு பிரதமர் கருத்து தெரிவித்தார். B.B.C. CANADA, நாடு முழுவதும் ஒலிபரப்பப்படும் தனது தேசிய செய்தியில் எனது கடந்த (04.07.08 அன்று ஆற்றிய) குத்பாவின் ஒரு பகுதியை இரண்டு நிமிடங்கள் வரை ஒலிபரப்பியது. குத்பாவின் ஆரம்ப பகுதியை ஒலிபரப்பியது. பள்ளிவாசலின் படத்தையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் படத்தையும் அது காட்டியது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது புகைப்படத்தை எடுக்கும்படி கூறியதன் நோக்கமும் நல்ல மக்கள் அவர்களது முகத்தை பார்த்து அவர்களை அயைாளம் கண்டு கொள்ளும் வகையில் அந்த மக்களிடம் இந்த போட்டோ சென்று சேர வேண்டும். அதன் மூலம் அல்லாஹ் அவர்களுக்கு உண்மையை புரிந்து கொள்வதற்கான தவ்ஃபீகை வழங்க வேண்டும் என்பதேயாகும். உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வரும் பைஅத்துகளில் பலரும் தங்களது கனவுகளில் இந்த படத்தை பார்த்துள்ளார்கள். இவர் தான் எங்களுக்கு உண்மையை ஏற்றுக் கொள்ளும்படி கூறினார் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போட்டோவை பார்த்ததும் அவர்கள் கூறியுள்ளார்கள். இதன் காரணமாக மேலும் ஜமாஅத்தைப் பற்றி ஆய்வு செய்ய இவர்களுக்கு கவனம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறே ஏதாவது ஒரு வீட்டில் அல்லது M.T.A-வில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போட்டோவை பார்த்து விட்டு அவர்களிடம் ஒரு தேட்டம் உருவாகியது. பிறகு இதுபற்றி அவர்கள் ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்துள்ளார்கள். அல்லாஹ் தனது அருளால் கனடாவில் மிகவும் விரிவான ஏற்பாட்டின்கீழ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புகைபடத்துடன் ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம் எல்லாரையும் சென்றடைவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கி விட்டான். அல்லாஹ் நல்ல இயல்புள்ள மக்களின் நெஞ்சங்களை திறப்பானாக. உண்மையை இவர்கள் புரிந்து கொள்வதற்கான தவ்ஃபீகை வழங்குவானாக.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இப்போது அந்த நேரம் வருகின்றது. ஒரு நொடியில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமுள்ள மக்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் கவனம் ஏற்படும். மரணித்தவர்களை வணங்குகின்ற இந்த மதத்திலிருந்து விலகி உண்மையான மார்க்கமான இஸ்லாத்தை தங்களது இரட்சிப்பிற்குரிய வழியென்று உறுதியாக நம்புவார்கள்.

அல்லாஹ் எல்லா அஹ்மதிகளையும் மனத்தூய்மையில் முன்னேறச் செய்து அவர்களை இஸ்லாத்தின் போதனைகளின் சரியான முன்மாதிரியாக ஆக்குவானாக. அதன் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொண்டு வந்த தூதுச் செய்திக்குரிய முழுமையான உரிமையை நிறைவேற்றுபவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. ஆமீன்.

**இரண்டாவது குத்பாவிற்கு முன்பு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

ஒரு வேதனை நிறைந்த செய்தி கிடைத்துள்ளது. 20 நாட்களுக்கு முன் நமது ஜமாஅத்திற்காக தனது வாழ்வை அர்ப்பணித்த கொள்கைப்பரப்புனர் மவ்லானா நூருத்தீன் முனீர் சாஹிப் அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். மேற்கு ஆப்பிரிக்காவில் கொள்கைப் பரப்புனராகவும் துணை வகீல் தஃப்ஸீராகவும் இவர் பணியாற்றியுள்ளார். தமது 93 வது வயதில் கராச்சியில் இவர் வஃபாத் ஆனார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

EAST AFRICAN TIMES என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் ரப்வாவில் இருந்து வெளிவரும் தஹ்ரீகே ஜதீத் என்ற மாத இதழின் ஆசிரியராகவும் Review of Religions -ன் ஆசிரியராகவும் இவர் பணியாற்றியுள்ளார். லஜ்னா இமாவுல்லாஹ்வின் வரலாறு என்ற நூலை ஆங்கிலத்தில் இவர் மொழிபெயர்த்து அது நான்கு பாகங்களாக வெளி வந்துள்ளது. இவருக்கு மூன்று மகன்கள் உள்ளனர். ரப்வாவில் உள்ள பெஹஸ்தி மக்பராவில் இவர் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார். இப்போது ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் இவருக்காக ஜனாஸா காயிப் தொழுகை தொழுவேன். அல்லாஹ் இவரை மன்னித்து இவரது பதவிகளை உயர்த்துவானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH, LONDON
ON 11.07.2008

Translated by : Maulavi M. Rafeeq Ahmad H.A
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456